FIRST INFORMATION REPORT

முதல் தகவல் அறிக்கை

(Under Section 154 Cr.P.C.)

~~(குற்றவிசாரணை முறை சட்டம் 154 இன் கீழ்)~~

Under Section 173 BNSS

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

8040862

1. District - : மாவட்டம் புதுக்கோட்டை PS: காவல்நிலையம் கூ.தா.க. பிரிவு Year: ஆண்டு 2026 FIR No.: முத.அ. எண் 05 Date: நாள் 13.10.2026

2. (i) Act சட்டம்: கூழல் தடுப்புச் சட்டம் 1988 Sections பிரிவுகள்: 13(2) r/w 13(1)(a)

(ii) Act சட்டம்: (திருத்தப்பட்டது 2018) Sections பிரிவுகள்:

(iii) Act சட்டம்: இ.த.ச. Sections பிரிவுகள்: 467, 468, 471, 420 & 477(A)

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்
Date from : நாள் முதல் 1997
Date to : நாள் வரை 2022
Time Period : நேர அளவு
Time from : நேரம் முதல்
Time to : நேரம் வரை

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 12.10.2026
Time : நேரம் 18:00 மணி

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண்
Time : நேரம்

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக முதல்நிலை விசாரணை மூலமாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் புண்ணியவயல் - 55கி.மீ. தெற்கிழ்
வேட்டனூர் - 60 கி.மீ. தெற்கிழக்கு
திருப்புனவாசல் - 55 கி.மீ. தெற்கிழக்

Beat Number : முறைக் காவல் எண்
(b) Address : முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்
District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் அ. பீட்டர்
(b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் அருளாணந்தம்

(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 1972
(d) Nationality : நாட்டினம் இந்தியன்
(e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : வழங்கப்பட்ட நாள்
Place of Issue : வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : தொழில் காவல் ஆய்வாளர்
(g) Address : முகவரி கூ.தா.க. பிரிவு, புதுக்கோட்டை.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

திரு. நா. பாண்டியராஜா, வயது 49/2026, த/பெ. நாச்சியப்பன், ஊராட்சி செயலாளர், மேல்மங்கலம் ஊராட்சி, அறந்தாங்கி ஒன்றியம், புதுக்கோட்டை.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

முதல்நிலை விசாரணை நடைபெற்றதால்

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்) —

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any: | |
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed பெ.ஜெயராஜ் Rank காவல் ஆய்வாளர் take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
முதல் தகவல் அறிக்கை குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer In-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

13.10.2016

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் அ.ஏ.பீட்டர்....
Rank: நிலை .....No. எண் .....
காவல் ஆய்வாளர்,
இழுவி நிலைய மீறும் கண்காணிப்பு
பிரிவு, புதுக்கோட்டை.

Attachment to Column 12 of First Information Report in Pudukkottai V&AC, Cr.No.05/2026

குற்றச்சாட்டு அலுவலர்

திரு.நா.பாண்டியராஜா, 49/2026
த/பெ. நாச்சியப்பன்,
ஊராட்சி செயலர்,
மேல்மங்களம் ஊராட்சி,
அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியம்,
புதுக்கோட்டை மாவட்டம்.

முதல் நிலை விசாரணை அறிக்கை PE 54/2025/RDP/PKன் படி மார்ஜினில் கண்ட குற்றச்சாட்டு அலுவலர் திரு.நா.பாண்டியராஜா, ஊராட்சி செயலர், மேல்மங்களம் ஊராட்சி, அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியம், புதுக்கோட்டை மாவட்டம் என்பவர் 2(c) ஊழல் தடுப்பு சட்டப்பிரிவு–1988, (as amended in 2018)ன் படி ஒரு பொது ஊழியர் ஆவார்.

G.O.(MS) No.60 Rural Development and Panchayat Raj (PR-1) Department dated 16.04.2015-ன் படி ஊராட்சி நிதி கணக்கு எண்–II (Village Panchayat Earmarked grants Account) (Form-23)க்கான தொகை ஊராட்சியில் செலுத்தப்பட வேண்டிய மின் கட்டணம் மற்றும் குடிநீர் கட்டணத்திற்கு மட்டும் செலவு செய்யப்படவேண்டும். அதன்படி, ஊராட்சி வங்கி கணக்கிற்கு வழங்கப்பட்டுள்ள காசோலையில் ஊராட்சி நிதி கணக்கு எண்–IIற்கான வங்கி கணக்கு எண் எழுதி, ஊராட்சி மன்றத் தலைவர் மற்றும் ஊராட்சி மன்றத் துணைத்தலைவர் கையொப்பம் செய்தும், ஊராட்சி மன்றத் தலைவர் இல்லாத காலகட்டத்தில் வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சி) மற்றும் மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர் ஆகியோர் கையொப்பம் செய்து, மேற்கண்ட செலவினத்தை உறுதி செய்யும் பொருட்டு காசோலையில் "for payments to TANGEDCO and/or TWAD Board and/or District Collector only" என்ற வாசகம் அடங்கிய அச்சு (Rubber Stamp) வைக்கப்பட்டு மின் கட்டணத்திற்கு மேற்பார்வை பொறியாளர், தமிழ்நாடு மின்சார வாரியம் (SE TANGEDCO) என்ற பெயரிலும், குடிநீர் கட்டணத்திற்கு நிர்வாக பொறியாளர், பராமரிப்பு கோட்டம், தமிழ்நாடு குடிநீர் வாரியம் (EE TWAD) என்ற பெயரிலும் காசோலை தயார் செய்து, ஊராட்சி செயலரால் சம்மந்தப்பட்ட அலுவலகத்தில் காசோலை கொடுக்கப்பட்டு அதற்கான ஏற்பளிப்பு ரசீது அந்த அலுவலகத்திலிருந்து பெறப்படுகிறது. மேற்கண்ட கட்டணம் செலுத்திய விபரத்திற்கு ஊராட்சி செயலரால் செலவினச் சீட்டு தயார் செய்து, அதனை ஊராட்சியில் பராமரிக்கப்படும் ஊராட்சி நிதி கணக்கு எண்–IIக்கான ரொக்கப்பதிவேட்டில் பதிவு செய்து ஊராட்சி தலைவரிடம் கையொப்பம் பெறப்படுவது நடைமுறையாகும்.

குற்றச்சாட்டு அலுவலர் திரு.பாண்டியராஜா கடந்த 17.03.1997 முதல் 27.05.2014ஆம் தேதி வரை புண்ணியவயல் ஊராட்சி செயலராக பணிபுரிந்தபோது புண்ணியவயல் ஊராட்சி நிதி கணக்கு எண்–IIன் வங்கி கணக்கு எண் 583323380லிருந்து 31 காசோலைகள்

மூலம் திரு.பாண்டியராஜாவின் வங்கி கணக்கிற்கு ரூ.7,24,720/–ஐ பணப்பரிவர்த்தனை செய்தும், மேற்படி வங்கி கணக்கில் இருந்து 10 காசோலைகள் மூலம் மொத்தமாக ரூ.2,04,173/–ஐ திரு.பாண்டியராஜா எடுத்து கையாடல் செய்துள்ளார். அதனை சம்மந்தப்பட்ட பதிவேடுகளில் பொய்யான பதிவுகளை மேற்கொண்டுள்ளார். மேலும் புள்ளனிபலையம் ஊராட்சி நிதி கணக்கு எண்–IIக்கான, வங்கி மூலம் கிடைக்கப்பெற்ற காசோலை எண்கள்.306948 மற்றும் 306950 ஆகிய 2 காசோலைகளில் புள்ளனிபலையம் ஊராட்சி மன்றத்தலைவர் மற்றும் ஊராட்சி மன்ற துணைத்தலைவர் ஆகியோரின் கையெழுத்துக்களை திரு.பாண்டியராஜாவே போலியாக போட்டுள்ளார். இதன் மூலம் காசோலைகளில் போலியான கையெழுத்திட்டு, பொய்யான பதிவுகள் மேற்கொண்டு, போலியான ஆவணங்கள் தயார் செய்து, அதனை உண்மையான ஆவணங்கள் போல பயன்படுத்தி, புள்ளனிபலையம் ஊராட்சி நிதி கணக்கு எண்–IIக்கான தொகை ரூ.9,28,893/– (7,24,720 + 2,04,173)ஐ கையாடல் செய்துள்ளார்.

குற்றச்சாட்டு அலுவலர் திரு.பாண்டியராஜா கடந்த 28.05.2014 முதல் 20.10.2020ஆம் தேதி வரை வேட்டனூர் ஊராட்சி செயலராக பணிபுரிந்துள்ளார். புதுக்கோட்டை மாவட்ட உதவி இயக்குனர் (தணிக்கை) அவர்களின் 19.12.2022ஆம் தேதியிட்ட உத்தரவுபடி, மாவட்டம் முழுவதும் அந்தந்த துணை வட்டார வளர்ச்சி அலுவலர்களால் 01.04.2018ம் தேதி முதல் 30.11.2022 வரையுள்ள காலத்திற்கு தணிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதன்படி, வேட்டனூர் ஊராட்சி நிதி கணக்கு எண்–IIல் உள்ள தொகையை 72 காசோலைகள் மூலம் ரூ.22,81,036/–ஐ தனது சொந்த வங்கி கணக்கிற்கு பணப்பரிமாற்றம் செய்துள்ளார். அதில் வங்கி மூலம் கிடைக்கப்பெற்ற 8 காசோலைகளில் வேட்டனூர் ஊராட்சி மன்றத் தலைவர், ஊராட்சி மன்ற துணைத் தலைவர் மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ.) மற்றும் மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர் ஆகியோர்களின் கையெழுத்துக்களை குற்றச்சாட்டு அலுவலர் பாண்டியராஜாவே போலியாக இட்டு, சம்மந்தப்பட்ட பதிவேடுகளில் பொய்யான பதிவுகளை மேற்கொண்டு, அவற்றை உண்மையான ஆவணங்கள் போல் பயன்படுத்தி ஊராட்சி நிதி கணக்கு எண்–IIல் உள்ள தொகை ரூ.22,81,036/–ஐ கையாடல் செய்துள்ளார். மேலும் ஆவுடையார்கோவில் ஊராட்சி ஒன்றிய துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (தணிக்கை) திரு.நா.சீனிவாசன் என்பவர் 01.04.2018ம் தேதி முதல் 20.10.2020ம் தேதி வரை உள்ள வேட்டனூர் ஊராட்சி நிதி கணக்கு எண்–IIயை தணிக்கை செய்து திரு.பாண்டியராஜன் என்பவர் வேட்டனூர் ஊராட்சியில் கடந்த 01.04.2018ம் தேதி முதல் 20.10.2020ம் தேதி வரை ஊராட்சி நிதி கணக்கு எண்–IIல் ரூ.8,85,281/–ஐ கையாடல் செய்துள்ளார் என்ற விபரத்தை கண்டுபிடித்து, கடந்த 31.01.2023ஆம் தேதி அறிக்கையில் தெரிவித்துள்ளார். அதன் பிறகு ஆவுடையார்கோவில் ஊராட்சி ஒன்றிய வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ.) அவர்களின் குறிப்பாணையின்படி, குற்றச்சாட்டு அலுவலர் திரு.பாண்டியராஜா கடந்த 07.01.2023ஆம் தேதி ரூ.70,000/–ம், 09.01.2023ஆம் தேதி ரூ.2,50,000/–ம், 10.01.2023ஆம் தேதி ரூ.3,15,000/–ம், 12.01.2023ஆம் தேதி ரூ.50,281/–ம்,

13.01.2023ஆம் தேதி ரூ.1,00,000/–ம், 20.01.2023ஆம் தேதி ரூ.1,00,000/–ம் ஆக மொத்தம் ரூ.8,85,281/–ஐ திருப்பி செலுத்தியுள்ளார். குற்றச்சாட்டு அலுவலர் பாண்டியராஜா கையாடல் செய்ததாக கண்டுபிடிக்கப்பட்ட பணம் ரூ.22,81,036/–ல் அவர் திருப்பி செலுத்திய தொகை ரூ.8,85,281/– போக மீதம் ரூ.13,95,755/– (22,81,036 – 8,85,281) கையாடல் செய்துள்ளார்.

குற்றச்சாட்டு அலுவலர் திரு.பாண்டியராஜா கடந்த 17.08.2021 முதல் 28.11.2022ஆம் தேதி வரை திருப்புனவாசல் ஊராட்சி செயலராக பணிபுரிந்தபோது, திருப்புனவாசல் ஊராட்சி நிதி கணக்கு எண்–IIன் வங்கி கணக்கு எண் 1570101012267ல் உள்ள தொகையை 19 காசோலைகள் மூலம் திரு.பாண்டியராஜாவின் வங்கி கணக்கிற்கு பணப்பரிவர்த்தனை செய்ததன் மூலம் ரூ.23,75,589/– அவரால் கையாடல் செய்யப்பட்டு உள்ளது. ஆவுடையார்கோவில் ஊராட்சி ஒன்றிய வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ.) அவர்களின் கடிதத்தின்படி மேற்கண்ட தொகையைக் கடந்த அக்டோபர் மாதம் 2022ஆம் ஆண்டு திருப்பி செலுத்தப்பட்டுள்ளது தெரியவருகிறது. மேற்கண்ட தொகை குற்றச்சாட்டு அலுவலர் திரு.பாண்டியராஜன் என்பவரால் கையாடல் செய்யப்பட்டதற்காக மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வளர்ச்சி) (பொ) அவர்களின் செயல்முறைகள் ந.க.வி3/6805/2022 (வளர்ச்சி), நாள் 29.11.2022ன்படி தற்காலிக பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளார். இக்குற்றச்சாட்டு சம்மந்தமாக குற்றச்சாட்டு அலுவலர் திரு.பாண்டியராஜா கடந்த 29.11.2022ஆம் தேதி முதல் 17.02.2025ஆம் தேதி வரை தற்காலிக பணி நீக்கத்தில் இருந்துள்ளார். மேலும் இக்குற்றச்சாட்டு தொடர்பாக துறை வாரியான விசாரணை மேற்கொள்ளப்பட்டு குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டு, கு.சா.அ. திரு.பாண்டியராஜாவுக்கு அவரது ஊதிய உயர்வை மூன்று மாதங்கள் தள்ளி வைத்து மேற்படி தண்டனை அவரது பணி ஓய்வு வரை (Cumulative Effect) தொடர உத்தரவிட்டு தண்டனை வழங்கப்பட்டுள்ளது. இருந்தபோதிலும், மேற்கண்ட தொகையைக் கையாடல் செய்வதற்கு 19 காசோலைகளில், துவக்கக்கட்ட விசாரணையில் கிடைக்கப்பெற்ற 15 காசோலைகளில் திருப்புனவாசல் ஊராட்சி மன்றத் தலைவர் மற்றும் ஊராட்சி மன்ற துணைத்தலைவர் ஆகியோரின் கையெழுத்துக்களை திரு.பாண்டியராஜாவே போலியாக இட்டு, சம்மந்தப்பட்ட பதிவேடுகளில் பொய்யான பதிவுகளை மேற்கொண்ட குற்றத்தினைச் செய்துள்ளார்.

எனவே குற்றச்சாட்டு அலுவலர் திரு.பாண்டியராஜா, புண்ணியவயல் மற்றும் வேட்டனூர் ஆகிய ஊராட்சிகளில் ஊராட்சி செயலராக பணி செய்த காலகட்டத்தில் ஊராட்சி நிதி கணக்கு எண்–IIல் மின் கட்டணம் மற்றும் குடிநீர் வரி ஆகியவை செலுத்தப்பட்டது போக மீதமுள்ள தொகையை அந்தந்த ஊராட்சி மன்றத் தலைவர், ஊராட்சி மன்ற துணைத் தலைவர், தனி அலுவலர் / வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ.) மற்றும் மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர் ஆகியோர்களின் கையெழுத்துகளை ஊராட்சி நிதி கணக்கு எண்–IIக்கான காசோலைகளில் போலியாக கையொப்பம் செய்து, உரிய பதிவேடுகளில் பொய்யான பதிவுகளை மேற்கொண்டு போலியான ஆவணங்கள் தயார் செய்து, அவற்றை உண்மையான ஆவணங்கள் போல் பயன்படுத்தி ஊராட்சி பணம் ரூ.23,24,648/– (ரூ.13,95,755+9,28,893)ஐ கையாடல் செய்தது தொடர்பாக அனுப்பப்பட்ட முதல்நிலை விசாரணை அறிக்கையை தொடர்ந்து, சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை

இயக்குநரக குறிப்பாணை எண். PE 54/2025/RDP/PK நாள்.01.10.2026ன் படி இன்று 13.10.2026 காலை 11.30 மணிக்கு புதுக்கோட்டை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு குற்ற எண்.05/2026 u/s 13(2) r/w 13 (1) (a) of Prevention of Corruption Act-1988 (as amended in 2018) and 467,468,471,420 & 477 (A) IPCன்படி என்னால் வழக்கு பதிவு செய்யப்பட்டது.

இதன் முதல் தகவல் அறிக்கையின் அசலை மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்றம் புதுக்கோட்டை அவர்களுக்கு அனுப்பியும், ஒரு நகல் சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிக்கு அனுப்பியும், மற்றொரு நகல் நிலைய கோப்பில் வைக்கப்பட்டது.

13.10.2026

(அ. பிட்டர்)

காவல் ஆய்வாளர்

ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு

புதுக்கோட்டை மாவட்டம்